# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம், திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

தொலைபேசி : ++91-044-2953 5806 /2953 5816 தொலைநகல் : ++91-044-2953 5893

மின்னஞ்சல் : tnerc@nic.in இணையதளம் : www.tnerc.gov.in

**செய்திக் குறிப்பு**

**தேதி:01-05-2023**

## தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் அறிவிப்பு

தமிழ்நாடு மின் வழங்கல் விதிகளில் உத்தேசிக்கப்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து பொது மக்களிடம் கருத்து கேட்கப்பட்டுள்ளது. இந்த மாற்றங்களில் வீடுகளுக்கு நிலைக்கட்டணம் மீதான அபராதம் விதிப்பது போன்ற தவறான தகவல்கள் சில ஊடகங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது முற்றிலும் தவறானது.

வீடுகளுக்கு நிலைக் கட்டணம் வசூலிப்பதிலிருந்து 10.09.2022 முதல் விலக்கு அளித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. நிலைக் கட்டணம் செலுத்துவதில் விலக்கு அளித்த பின்பு நிலைக் கட்டணம் மீதான அபராதம் என்பது தவறான செய்தியாகும்.

மேற்கண்ட வரைவு விதிகளின் மீது பொது மக்களின் கருத்துரைகளை சமர்ப்பிக்கலாம். அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் கருத்துரைகளை பரிசீலினை செய்து விதிகளின் மீது இறுதி முடிவு செய்யப்படும்.

---

செயலாளர்<br>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்